முதலாவது  கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்.

முன்னிலை:  திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை

<u>அசல் வழக்கு எண்.  513/2019</u>

(CNR No: TNSA 01-006340-2019)

1. B. பாவாயி அம்மாள் (இறந்து விட்டார்)
2. B. பழனிசாமி
3. B. சுமதி
4. B. அருள்
5. S. தங்கராஜ்
6. S. ஆறுமுகம்
7. S. சீனிவாசன்
8. முனியன்
9. செல்வம்
10. செல்லம்மாள்
11. ராமக்காள் .... வாதிகள்

/எதிராக/

1. ராஜமாணிக்கம் (இறந்து விட்டார்)
2. S. லட்சுமி
3. S. சுசீலா
4. நல்லமுத்து
5. கார்த்தி
6. கௌதமி
7. S. கண்ணன்
8. செல்வராஜ் (இறந்து விட்டார்)
9. சரோஜா
10. சாவித்திரி
11. கிராம நிர்வாக அலுவலர், தீவட்டிப்பட்டி கிராமம். காடையாம்பட்டி வட்டம்.
12. வட்டாட்சியர்,  காடையாம்பட்டி வட்டம்.
13. வருவாய் கோட்ட அலுவலர், மேட்டூர் அணை.
14. மாவட்ட ஆட்சியர், சேலம்.
15. சாவித்திரி
16. ராஜன்
17. சத்தியா
18. சாந்தி
19. S. மைனாவதி

20. S. ஹரிகிருஷ்ணன்
21. S. செந்தில்குமார் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 21.04.2025–ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 7 மற்றும் 9 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.எம்.ஜெயபால் அவர்கள் முன்னிலையாகியும், 11 முதல் 21 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் :–

## தீர்ப்புரை

ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 7096/2019 – ஆக 16.09.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட 20.08.2019 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இல்லா நிலையது, விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 13 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் வாதிகளுக்கு 5 பாகங்களை கூட்டாக ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், 2 முதல் 6, 9–வது மற்றும் 10–வது பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படும் வரை மூன்றாம் நபர்களுக்கு பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் விற்க கூடாது என்றும், வில்லங்கம் செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், காடையாம்பட்டி வட்டம், தீவட்டிபட்டி கிராமம், பட்டா எண்கள் 108 மற்றும் 164 –யை பொறுத்து 2 முதல் 6, 9–வது மற்றும் 10– வது பிரதிவாதிகளின் பெயரிலோ அல்லது வேறு நபர்களின் பெயரிலோ தாவா சொத்துக்களைப் பொறுத்து இறுதியாக பாகப்பிரிவினை ஏற்படும் வரை பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்துறை

ஆவணங்களிலும், பட்டாவிலும் எந்தவிதமான மாற்றமும் 11 முதல் 14 பிரதிவாதிகள் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் தாவா செலவு தொகை கோரியும் வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **வாதிகள் திருத்தப்பட்ட வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு** :-

2 முதல் 4 வாதிகளின் தாயார் முதல் வாதி ஆவார். பாலசுப்ரமணியம் என்பவரின் வாரிசுகள் 1 முதல் 4 வாதிகள் ஆவார்கள். பாலசுப்ரமணியம் என்பவர் இறந்து விட்டார். 5 முதல் 7 வாதிகள் சகோதரர்கள் ஆவார்கள். சீரங்கன் என்பவரின் மகன்கள் 5 முதல் 7 வாதிகள் ஆவார்கள். சீரங்கன் என்பவர் இறந்து விட்டார். 9 முதல் 11 வாதிகளின் தந்தை 8-வது வாதி ஆவார். மாதம்மாள் என்பவரின் வாரிசுகள் 8 முதல் 11 வாதிகள் ஆவார்கள். மாதம்மாள் என்பவர் இறந்து விட்டார். 1 முதல் 3 மற்றும் 7-வது பிரதிவாதிகள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆவார்கள். 5-வது மற்றும் 6-வது பிரதிவாதிகளின் தந்தை 4-வது பிரதிவாதி ஆவார். ஜானகி என்பவரின் கணவர் 4-வது பிரதிவாதி ஆவார். ஜானகி என்பவர் இறந்து விட்டார். சீரங்கன் என்பவரின் பிள்ளைகள் 8 முதல் 10 பிரதிவாதிகள் ஆவார்கள். சீரங்கன் என்பவரின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1 முதல் 10 பிரதிவாதிகள் ஆவார்கள். சீரங்கன் என்பவர் தனது வாழ்நாளில் பழனியம்மாள், மல்லம்மாள் மற்றும் வீரம்மாள் ஆகிய மூன்று மனைவிகளை திருமணம் செய்தார். சீரங்கனின் முதல் மனைவி பழனியம்மாள் மூலமாக பாலசுப்ரமணியம், தங்கராஜ், ஆறுமுகம், சீனிவாசன் என்ற 4 மகன்களும், மாதம்மாள் என்ற மகளும் பிறந்தனர். பாலசுப்ரமணியம் என்பவர் 1 முதல் 4 வாதிகளை

வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். சீரங்கன் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களின் மகள் மாதம்மாள் என்பவர் 8 முதல் 11 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். சீரங்கனின் 2–வது மனைவியான மாதம்மாள் மூலமாக ராஜமாணிக்கம், கண்ணன் என்ற இரண்டு மகன்களும், லட்சுமி, சுசீலா, ஜானகி என்ற மகள்களும் பிறந்தனர். ஜானகி என்பவர் 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். சீரங்கனின் 3–வது மனைவியான வீரம்மாள் மூலமாக செல்வராஜ் என்ற மகனும், சரோஜா மற்றும் சாவித்திரி என்ற மகள்களும் பிறந்தனர். வாதிகள் மற்றும் 1 முதல் 10 பிரதிவாதிகள் சீரங்கனின் வாரிசுகள் ஆவார்கள். முதல் பிரதிவாதியின் வாரிசுகள் 15 முதல் 18 பிரதிவாதிகள் ஆவார்கள். 8–வது பிரதிவாதியின் வாரிசுகள் 19 முதல் 21 பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் இந்து பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். தாவா சொத்துக்களை சீரங்கன் என்பவர் 23.05.1957 தேதியில் சுயார்ஜிதமாக கிரையம் பெற்றார். அந்த கிரைய ஆவணம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1280/1957 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. சீரங்கன் என்பவருக்கு தீவட்டிபட்டி கிராமத்தில் பூர்வீக சொத்துக்கள் இருந்தது. தீவட்டிபட்டி கிராமத்தில் இருந்த பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து சீரங்கன் மற்றும் ஆண் வாரிசுகளுக்கிடையே 11.10.1999 தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2788/1999 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் படி சீரங்கன் என்பவருக்கு ஏ –அட்டவணை சொத்தாக தொகை கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது. தாவா சொத்துக்கள்

சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், மூன்று மனைவிகள் மூலம் பிறந்த பிள்ளைகள் அனைவரும் பாகம் பிரித்துக்கொள்ள வேண்டும் என கூறினார். 11.10.1999 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் அமலுக்கு வந்து விட்டது. சீரங்கன் என்பவர் 18.12.2007 தேதியில் இறந்துவிட்டார். வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து கூட்டு பங்குதாரர்கள் ஆவார்கள். வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தனர். 1 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்தனர். 2–வது வாதி ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.08.2019 ம் தேதி தடங்கல் மனு கொடுத்தார். 20.10.2019 ம் தேதி பஞ்சாயத்து நடந்தது. பஞ்சாயத்தார்கள் 1 முதல் 10 பிரதிவாதிகளிடம் தாவா சொத்துக்களை சுமூகமாக பாகம் பிரித்து கொள்ள அறிவுரை கூறினர். வாதிகளுக்கு தெரியாமலும், வாதிகளின் சம்மதம் இல்லாமலும் தாவா சொத்துக்களை பொறுத்து சீரங்கன் என்பவரின் பெண் பிள்ளைகள் பொய்யாகவும், மோசடியாகவும் ஆவணம் ஏற்படுத்தினர். வாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து வில்லங்க சான்று பெற்று பார்த்தபோது 2 முதல் 6, 9–வது மற்றும் 10–வது பிரதிவாதிகள் 20.08.2019 தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளனர் என தெரிய வந்தது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.09.2019 தேதியில் ஆவண எண்.7096/2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் சீரங்கனின் முதல் மனைவி பெயர் மல்லம்மாள் என குறிப்பிடப்பட்டுள்ளது. சீரங்கனின் முதல் மனைவி பெயர் பழனியம்மாள். மற்ற கூட்டு பங்கு தாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் 20.08.2019 தேதிய பாகப்பிரிவினை பத்திரம்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. 20.08.2019 தேதிய பாகப்பிரிவினை பத்திரம் அமலுக்கு வரவில்லை. 20.08.2019 தேதிய பத்திரம் விழலானது மற்றும் இல்லாநிலையது ஆகும். 2–வது மற்றும் 5 முதல் 7 வாதிகள் 24.10.2019 தேதியில் வருவாய்துறை அலுவலர்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினர். தாவா சொத்துக்களில் 1 முதல் 4 வாதிகளுக்கு 1/13 பங்கும், 5 முதல் 7 வாதிகளுக்கும், 1 முதல் 3, 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 1/13 பங்கும், 8 முதல் 11 வாதிகளுக்கு 1/13 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1/13 பங்கும் கிடைக்கத்தக்கது ஆகும். வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் கூட்டாக 5/13 பங்கு கிடைக்கத்தக்கது ஆகும். 1 முதல் 10 பிரதிவாதிகள் வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்து வருகின்றனர். எனவே, வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரியும், பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

3. <u>1 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளின் சுருக்கம் பின் வருமாறு</u> :–

வழக்கு சட்டப்படியும், பொருண்மைகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. 1 முதல் 10 பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். சீரங்கன் என்பவருக்கு முறையே பழனியம்மாள், மல்லம்மாள் மற்றும் வீரம்மாள் ஆகிய மூன்று மனைவிகள் இருந்தனர். சீரங்கன் என்பவர் 18.12.2007 தேதியில் இறந்து விட்டார். சீரங்கன் என்பவர் தாவா சொத்துக்களை தகுந்த மறு பயனுக்கு குப்பன் மற்றும் பலர் ஆகியோர்களிடமிருந்து 23.05.1957 தேதியில் கிரையம் பெற்றார். தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப

சொத்துக்கள் அல்ல. 17.05.1995 தேதிய ஒப்பந்தத்தில் சீரங்கன் என்பவரும், சீரங்கனின் மகன்களும் கையெழுத்து செய்துள்ளனர். 17.05.1995 தேதிய ஆவணத்தை தரப்பினர்களால் ஏற்கப்பட்டு அமலுக்கு வந்து விட்டது. தாவா சொத்துக்களை 1 முதல் 10 பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர். 11.10.1999 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் வேறு சொத்துக்கள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகள் 11.10.1999 தேதிய ஆவணத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். வழக்கு கால வரம்பு கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளுக்கும், சீரங்கனின் மகன்களுக்கும் தாவா சொத்துக்களில் உரிமையும், பாத்தியமும், நலனும் இல்லை. தாவா சொத்துக்கள் சீரங்கனின் மகள்களுக்கு சீதனமாக குடும்ப ஏற்பாட்டின்படி கொடுக்கப்பட்டது ஆகும். வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து கூட்டுக்குடும்பமாக இருந்து வருவதாக கூறியுள்ளது உண்மை இல்லை. 17.05.1995 தேதிய குடும்ப ஏற்பாட்டின்படி காடையாம்பட்டி வட்டம், தீவட்டிபட்டி கிராமம், குப்பன் காடு என்ற அசையா சொத்தை சீரங்கனின் மகள்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வாதிகள் 17.05.1995 தேதிய குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். வாதிகள் தாவா சொத்துக்களில் உரிமை கோர இயலாது. வாதிகள் முரண்தடையால் உரிமை கோர இயலாது. 20.08.2019 தேதிய ஆவணம் செல்லத்தக்கது ஆகும். 20.08.2019 தேதிய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தும். தாவா சொத்துக்களை பொறுத்து பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. வழக்கு சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை. வாதிகள் உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. 11.10.1999 தேதிய ஆவணத்தில் இனி மேற்கொண்டு பிரிக்க

வேண்டிய வேறு பொது சொத்துக்கள் எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல. வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் பங்கு கிடைக்கத்தக்கது அல்ல. வாதிகள் தாவா சொத்துக்களை அனுபவிக்க வில்லை. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>2 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளின் சுருக்கம் பின் வருமாறு</u> :-

வழக்கு சட்டப்படியும், பொருண்மைகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வாதிகளும், இந்த பிரதிவாதிகளும் இந்து பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப உறுப்பினர்கள் அல்ல. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல. தாவா சொத்துக்கள் சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். 17.05.1995 தேதியில் குடும்ப ஏற்பாடு ஆவணம் எழுதப்பட்டது. சீரங்கனின் முதல் மனைவி மூலம் பிறந்த மாதம்மாள் என்பவருக்கு 17.05.1995 தேதிய குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தில் சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை. மாதம்மாள் என்பவர் குடும்ப ஏற்பாடு ஆவணம் எழுதப்படுவதற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். சீரங்கன் என்பவரும், சீரங்கனின் 7 மகன்களும் 11.10.1999 தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். 11.10.1999 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. சீரங்கனின் மகள்களான லட்சுமி, சுசீலா, ஜானகி, சரோஜா மற்றும் சாவித்திரி ஆகியோர்களுக்கு 1995ம் வருடத்திலேயே சொத்துக்கள் கொடுக்கப்பட்டு, அனுபவித்து வருகின்றனர். வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் உரிமை இல்லை. வழக்கு மூலம் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு சி.எஸ்.ஆர். எண்.

394/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. 20.08.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் பேரில் சேலம் மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு முழு விசாரணைக்கு பிறகு 20.08.2019 தேதிய பாகப்பிரிவினை பத்திரம் சரியானது என கூறி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. வாதிகள் அந்த உத்தரவின்பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை. எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்.

5. **<u>வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன :-</u>**

1. Is it true that the plaintiffs have no title and possession over the suit property as mentioned in the document dated 17.05.1995?
2. Whether the plaintiffs are entitled to the relief of declaration declaring the partition deed dated 20.08.2019 is null and void?
3. Whether the plaintiffs are entitled to have 5/13 share in the suit properties?
4. Whether the plaintiffs are entitled for preliminary decree of partition as prayed for?
5. Whether the plaintiffs are entitled for permanent injunction against defendants 2 to 6, 9 and 10 as prayed for?
6. Whether the plaintiffs are entitled for permanent injunction against defendants 11 to 14 as prayed for?
7. To what other relief?

6. வாதிகள் தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 மற்றும் பி.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. <u>எழுவினாக்கள் 1 முதல் 6</u> :–

ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 7096/2019 – ஆக 16.09.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட 20.08.2019 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இல்லா நிலையது, விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 13 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் வாதிகளுக்கு 5 பாகங்களை கூட்டாக ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், 2 முதல் 6, 9–வது மற்றும் 10–வது பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படும் வரை மூன்றாம் நபர்களுக்கு பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் விற்க கூடாது என்றும், வில்லங்கம் செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், காடையாம்பட்டி வட்டம், தீவட்டிபட்டி கிராமம், பட்டா எண்கள் 108 மற்றும் 164 –யை பொறுத்து 2 முதல் 6, 9–வது மற்றும் 10– வது பிரதிவாதிகளின் பெயரிலோ அல்லது வேறு நபர்களின் பெயரிலோ தாவா சொத்துக்களைப் பொறுத்து இறுதியாக பாகப்பிரிவினை ஏற்படும் வரை பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களிலும், பட்டாவிலும் எந்தவிதமான மாற்றமும் 11 முதல் 14 பிரதிவாதிகள் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் தாவா செலவு தொகை கோரியும் வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

8. வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் சீரங்கன் என்பவரின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1 முதல் 10, 15 முதல் 21 பிரதிவாதிகள் என்றும், சீரங்கன் என்பவர் தனது வாழ்நாளில் பழனியம்மாள், மல்லம்மாள் மற்றும்

வீரம்மாள் ஆகிய மூன்று மனைவிகளை திருமணம் செய்தார் என்றும், சீரங்கனின் முதல் மனைவி பழனியம்மாள் மூலமாக பாலசுப்ரமணியம், தங்கராஜ், ஆறுமுகம், சீனிவாசன் என்ற 4 மகன்களும், மாதம்மாள் என்ற மகளும் பிறந்தனர் என்றும், பாலசுப்ரமணியம் என்பவர் 1 முதல் 4 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், சீரங்கன் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களின் மகள் மாதம்மாள் என்பவர் 8 முதல் 11 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், சீரங்கனின் 2–வது மனைவியான மாதம்மாள் மூலமாக ராஜமாணிக்கம், கண்ணன் என்ற இரண்டு மகன்களும், லட்சுமி, சுசீலா, ஜானகி என்ற மகள்களும் பிறந்தனர் என்றும், ஜானகி என்பவர் 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், சீரங்கனின் 3–வது மனைவியான வீரம்மாள் மூலமாக செல்வராஜ் என்ற மகனும், சரோஜா மற்றும் சாவித்திரி என்ற மகள்களும் பிறந்தனர் என்றும், முதல் பிரதிவாதியின் வாரிசுகள் 15 முதல் 18 பிரதிவாதிகள் என்றும், 8–வது பிரதிவாதியின் வாரிசுகள் 19 முதல் 21 பிரதிவாதிகள் என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் இந்து பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், தாவா சொத்துக்களை சீரங்கன் என்பவர் 23.05.1957 தேதியில் சுயார்ஜிதமாக கிரையம் பெற்றார் என்றும், அந்த கிரைய ஆவணம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1280/1957 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சீரங்கன் என்பவருக்கு தீவட்டிபட்டி கிராமத்தில் பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றும், தீவட்டிபட்டி கிராமத்தில் இருந்த பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து சீரங்கன் மற்றும் ஆண் வாரிசுகளுக்கிடையே 11.10.1999 தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அந்த பாகப்பிரிவினை

பத்திரம் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2788/1999 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் படி சீரங்கன் என்பவருக்கு ஏ –அட்டவணை சொத்தாக தொகை கொடுக்கப்பட்டது என்றும், மற்றவர்களுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றும், தாவா சொத்துக்கள் சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், மூன்று மனைவிகள் மூலம் பிறந்த பிள்ளைகள் அனைவரும் பாகம் பிரித்துக்கொள்ள வேண்டும் என சீரங்கன் கூறினார் என்றும், 11.10.1999 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் அமலுக்கு வந்து விட்டது என்றும், சீரங்கன் என்பவர் 18.12.2007 தேதியில் இறந்துவிட்டார் என்றும், வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து கூட்டு பங்குதாரர்கள் என்றும், வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருகின்றனர் என்றும், 1 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்தனர் என்றும், 2–வது வாதி ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.08.2019 ம் தேதி தடங்கல் மனு கொடுத்தார் என்றும், 20.10.2019 ம் தேதி பஞ்சாயத்து நடந்தது என்றும், பஞ்சாயத்தார்கள் 1 முதல் 10 பிரதிவாதிகளிடம் தாவா சொத்துக்களை சுமூகமாக பாகம் பிரித்து கொள்ள அறிவுரை கூறினர் என்றும், வாதிகளுக்கு தெரியாமலும், வாதிகளின் சம்மதம் இல்லாமலும் தாவா சொத்துக்களை பொறுத்து சீரங்கன் என்பவரின் பெண் பிள்ளைகள் பொய்யாகவும், மோசடியாகவும் ஆவணம் ஏற்படுத்தினர் என்றும், வாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து வில்லங்க சான்று பெற்று பார்த்தபோது 2 முதல் 6, 9–வது மற்றும் 10–வது பிரதிவாதிகள் 20.08.2019 தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளனர் என தெரிய வந்தது என்றும், அந்த பாகப்பிரிவினை பத்திரம்

ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.09.2019 தேதியில் ஆவண எண்.7096/2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் சீரங்கனின் முதல் மனைவி பெயர் மல்லம்மாள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சீரங்கனின் முதல் மனைவி பெயர் பழனியம்மாள் என்றும், மற்ற கூட்டு பங்கு தாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் 20.08.2019 தேதிய பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், 20.08.2019 தேதிய பாகப்பிரிவினை பத்திரம் அமலுக்கு வரவில்லை என்றும், 20.08.2019 தேதிய பத்திரம் விழலானது, இல்லாநிலையது மற்றும் செல்லத்தக்கது அல்ல என்றும், 2–வது மற்றும் 5 முதல் 7 வாதிகள் 24.10.2019 தேதியில் வருவாய்துறை அலுவலர்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினர் என்றும், தாவா சொத்துக்களில் 1 முதல் 4 வாதிகளுக்கு 1/13 பங்கும், 5 முதல் 7 வாதிகளுக்கும், 1 முதல் 3, 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 1/13 பங்கும், 8 முதல் 11 வாதிகளுக்கு 1/13 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1/13 பங்கும் கிடைக்கத்தக்கது என்றும், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் கூட்டாக 5/13 பங்கு கிடைக்கத்தக்கது என்றும், 1 முதல் 10 பிரதிவாதிகள் வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்து வருகின்றனர் என்றும் கூறினார்.

9. பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் சீரங்கன் என்பவர் தாவா சொத்துக்களை தகுந்த மறு பயனுக்கு குப்பன் மற்றும் பலர் ஆகியோர்களிடமிருந்து 23.05.1957 தேதியில் கிரையம் பெற்றார் என்றும், தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும், 17.05.1995 தேதிய ஒப்பந்தத்தில் சீரங்கன் என்பவரும், சீரங்கனின் மகன்களும் கையெழுத்து செய்துள்ளனர் என்றும், 17.05.1995 தேதிய ஆவணத்தை தரப்பினர்களால் ஏற்கப்பட்டு

அமலுக்கு வந்து விட்டது என்றும், தாவா சொத்துக்களை 1 முதல் 10 பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர் என்றும், 11.10.1999 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் வேறு சொத்துக்கள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதிகள் 11.10.1999 தேதிய ஆவணத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும், வழக்கு கால வரம்பு கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கும், சீரங்கனின் மகன்களுக்கும் தாவா சொத்துக்களில் உரிமையும், பாத்தியமும், நலனும் இல்லை என்றும், தாவா சொத்துக்கள் சீரங்கனின் மகள்களுக்கு சீதனமாக குடும்ப ஏற்பாட்டின்படி கொடுக்கப்பட்டது என்றும், வாதிகளும், 1 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களைப் பொறுத்து கூட்டுக்குடும்பமாக இருந்து வருவதாக கூறியுள்ளது உண்மை இல்லை என்றும், 17.05.1995 தேதிய குடும்ப ஏற்பாட்டின்படி காடையாம்பட்டி வட்டம், தீவட்டிபட்டி கிராமம், குப்பன் காடு என்ற அசையா சொத்தை சீரங்கனின் மகள்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. என்றும், வாதிகள் 17.05.1995 தேதிய குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும், வாதிகள் தாவா சொத்துக்களில் உரிமை கோர இயலாது என்றும், 20.08.2019 தேதிய ஆவணம் செல்லத்தக்கது என்றும், 20.08.2019 தேதிய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தும் என்றும், 11.10.1999 தேதிய ஆவணத்தில் இனி மேற்கொண்டு பிரிக்க வேண்டிய வேறு பொது சொத்துக்கள் எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் பங்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் கூறினார்.

10. 2 முதல் 4 வாதிகளின் தாயார் முதல் வாதி ஆவார். பாலசுப்ரமணியம் என்பவரின் வாரிசுகள் 1 முதல் 4 வாதிகள் ஆவார்கள். 5 முதல் 7 வாதிகள் சகோதரர்கள் ஆவார்கள். சீரங்கன் என்பவரின் மகன்கள் 5 முதல் 7 வாதிகள் ஆவார்கள். 9 முதல் 11

வாதிகளின் தந்தை 8–வது வாதி ஆவார். மாதம்மாள் என்பவரின் வாரிசுகள் 8 முதல் 11 வாதிகள் ஆவார்கள். 1 முதல் 3 மற்றும் 7–வது பிரதிவாதிகள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆவார்கள். 5–வது மற்றும் 6–வது பிரதிவாதிகளின் தந்தை 4–வது பிரதிவாதி ஆவார். ஜானகி என்பவரின் கணவர் 4–வது பிரதிவாதி ஆவார். சீரங்கன் என்பவரின் பிள்ளைகள் 8 முதல் 10 பிரதிவாதிகள் ஆவார்கள். சீரங்கன் என்பவரின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1 முதல் 10 பிரதிவாதிகள் ஆவார்கள். தரப்பினர்களின் உறவுமுறை இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் எந்த சர்ச்சையும் இல்லை. சீரங்கன் என்பவர் தனது வாழ்நாளில் பழனியம்மாள், மல்லம்மாள் மற்றும் வீரம்மாள் ஆகிய மூன்று மனைவிகளை திருமணம் செய்தார் என்பதும், சீரங்கனின் முதல் மனைவி பழனியம்மாள் மூலமாக பாலசுப்ரமணியம், தங்கராஜ், ஆறுமுகம், சீனிவாசன் என்ற 4 மகன்களும், மாதம்மாள் என்ற மகளும் பிறந்தனர் என்பதும், பாலசுப்ரமணியம் என்பவர் 1 முதல் 4 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்பதும், சீரங்கன் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களின் மகள் மாதம்மாள் என்பவர் 8 முதல் 11 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்பதும், சீரங்கனின் 2–வது மனைவியான மாதம்மாள் மூலமாக ராஜமாணிக்கம், கண்ணன் என்ற இரண்டு மகன்களும், லட்சுமி, சுசீலா, ஜானகி என்ற மகள்களும் பிறந்தனர் என்பதும், ஜானகி என்பவர் 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்பதும், சீரங்கனின் 3–வது மனைவியான வீரம்மாள் மூலமாக செல்வராஜ் என்ற மகனும், சரோஜா மற்றும் சாவித்திரி என்ற மகள்களும் பிறந்தனர் என்பதும், வாதிகள் மற்றும் 1 முதல் 10 பிரதிவாதிகள் சீரங்கனின் வாரிசுகள் என்பதும், முதல் பிரதிவாதியின் வாரிசுகள் 15 முதல் 18 பிரதிவாதிகள் என்பதும், 8–வது பிரதிவாதியின்

வாரிசுகள் 19 முதல் 21 பிரதிவாதிகள் என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

11. வா.சா.ஆ.5 ஆன இறப்பு சான்றை பரிசீலனை செய்கையில் சீரங்கன் என்பவர் 18.12.2007 ம் தேதி இறந்து விட்டார் என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.1 ஆன 23.05.1957 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் நகலை பரிசீலனை செய்கையில் தீவட்டிபட்டி கிராமத்தில் க.ரீ.ச.நெ.114/5–ல் ஏக்கர் 2.89 பூமியையும், க.ரீ.ச.நெ.110/3–ல் ஏக்கர் 0.49 பூமியையும் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. வா.சா.1 தங்கராஜ் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் தன் தகப்பனார் சீரங்கனுக்கு வேடப்பன் காட்டு வளவில் பட்டா எண்.431, ச.எண்.85/11, அய்யர் காட்டு வளவில் பட்டா எண்.164, ச.எண்.114/5, 92/7, பட்டா எண்.108, ச.எண்.110/3 ஏ, 110/3 பி ஆகிய நிலங்கள் சொந்தமானவை என்றும், அவரது சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டவை என்றும் மிகத் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.ஆ.2 ஆன பட்டா எண்.108–யை பரிசீலனை செய்கையில் புல எண்.110/3 ஏ–ல் 0–4.50 ஹெக்டேர்ஸ் பூமியும், புல எண்.110/3 பி –ல் 0–15.50 ஹெக்டேர்ஸ் பூமியும் சீரங்கன் பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 ஆன பட்டா எண்.164–யை பரிசீலனை செய்கையில் புல எண்.114/5–ல் 1 –17.00 ஹெக்டேர்ஸ் பூமியும், புல எண்.92/7–ல் 0–31.50 ஹெக்டேர்ஸ் பூமியும் சீரங்கன், பாலசுப்ரமணியன் மற்றும் கண்ணன் ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்களின்படி தாவா சொத்துக்கள் சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பது தெளிவாகின்றது. தாவா சொத்துக்கள் இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதற்கு எந்தவித சாட்சியமும் இல்லை. எனவே, தாவா சொத்துக்கள்

சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12. பி.சா.ஆ.6 ஆன 17.05.1995 தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் உண்மையானதா? மற்றும் செல்லத்தக்கதா? என்பதை பரிசீலிக்க வேண்டி உள்ளது. வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றும், எனவே சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் கூறினார். பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரம் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரத்தின் முதல் தாளில் தரப்பினர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை. பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரத்தை பரிசீலனை செய்கையில் 17.05.1995 தேதியில் சொத்துக்கள் பிரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரைக்கு ஆதரவாக கீழ்க்கண்ட முன் தீர்ப்புரைகளை மேற்கோள் காட்டினார்.

**CDJ 2018 MHC 4134**

**Govindasamy -Vs- Kandasamy**

**Para. 10 –** For the reasons aforestated, the document marked as Ex.A4, being a partition list, as determined by the first appellate Court, requires compulsory registration as per law and the said document not having been registered, no right would flow under the said document in favour of the plaintiff's vendor as put forth in the plaint and accordingly, it is found that the plaintiff having failed to establish his vendor's title, possession and enjoyment plus his title, possession and enjoyment of the suit property as projected by him, the substantial questions of law formulated in the second appeal are answered against the plaintiff.

**CDJ 2022 MHC 1921**

**Saritha -Vs- M.A.Shanmugham and Others**

**Para. 17 –** A family arrangement or a Muchalika in effect grants right or title to certain portions of property to a few individuals and also at the same time takes away rights and title of some of the parties to the other portions. This document therefore comes squarely under Section 17 of the Registration Act, 1908, as a document which has to be compulsorily registered and under Section 49 of the

Registration Act, 1908, a document which has to be compulsorily registered cannot be admitted in evidence.

**Para. 18 –** The offer of the 1st respondent /plaintiff to pay the penalty towards stamp duty can only cure the effect of stamping the document to the value of the property, but non-registration can never be cured.

**CDJ 2023 MHC 4366**

**Nallammal and Others -Vs- Thothan Ambalam**

**Para.13 –** The Panchayat muchalika dated 15.03.2000 (Ex.A1), recording the alleged partition between the appellant and the respondent is an unregistered document. This Court will have to first examine as to whether an unregistered document can be freated as a document of title. The panchayat muchalika (Ex.A1) records a partition arrangement between the appellant and the respondent by which each of them are entitled for 1 acre and 53 cents. As seen from the panchayat muchalika (Ex.A1), the partition was allegedly effected by the parties themselves, though in the presence of panchayatdars. When a family arrangement, as is the case with panchayat muchalika is reduced to writing and it purports to create, declare, assign, limit or extinguish any right, title or interest of any immovable property, it must be stamped and duly registered as per the Indian Stamp Act and Indian Registration Act. Panchayat muchalika is in the nature of a family arrangement and being an unregistered document, panchayat muchalika which has allegedly created right/title in favour of both the parties, is not admissible in evidence as per Section 17 and 49 of the Tamil Nadu Registration Act. Section 17 of the Tamil Nadu Registration Act deals with documents of which registration is compulsory. The document of the nature as that of panchayat muchalika (Ex.A1) is not exempted from registration under Section 17 of the Tamil Nadu Registration Act. Section 17(2) of the Tamil Nadu Registration Act has enumerated the documents which are exempted from registration and a family arrangement like that of panchayat muchalika (Ex.A1) is not exempted from registration. Section 49 of the Tamil Nadu Registration Act makes it clear that any document which requires registration is not admissible in evidence.

**CDJ 2019 3594**

**Thangamuthu and Others -Vs- A.Jeyaraj**

**Para. 12 –** It is clear from the judgments that have been cited on the side of the petitioners that a document, which is compulsorily registrable under the Registration Act, cannot be admitted in evidence, unless, it is registered. If a document is inherently bad for non-registration, it cannot be cured by paying deficit stamp duty and penalty. It is even a settled position of law that such documents cannot be looked into even for collateral purposes.

**Para.14 –** The Judgments that have been cited by the learned counsel for the respondent may not come to his aid, since the Hon'ble Supreme Court in those judgments has categorically held that in view of Section 35 of the Stamp Act,1899, the document, which falls under the said provision, shall not be admitted for any purpose whatsoever. This would also include for collateral purpose.

**Para. 15 –** In view of the above settled position of law, the Court below went wrong in giving such a liberty to the respondent to pay sufficient stamp duty and thereafter, mark the document. Such liberty ought not to have been given by the Court below, since the document in question is per se inadmissible. Therefore, the liberty granted by the Court below in the order passed in I.A.No.800 of 2011 in O.S.No.228 of 2017, dated 28.10.2011, is hereby set aside.

மேற்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. மேலும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டது.

**2001 (1) CTC 112**

**A.C.Lakshmipathy and another -Vs- A.M.Chakrapani Reddiar and five others**

Stamp Act, 1899, Section 35 – Effect of – Unstamped documents – Documents if required to be stamped but not so stamped cannot be looked into for any purpose including collateral purpose – (Paras 26 & 27)

**2020 (2) MWN (Civil) 313**

**Sankar @ Barma Sankar – Vs – Sivasekaran @ Barma Sekar**

Held: document by which parties have agreed to divide properties required to be registered – Unregistered and unstamped Karavolai, not admissible in evidence as matter of course.

மேற்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. பி.சா.ஆ.6 ஆவணம் எழுதப்பட்ட தேதியில் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பதிவுச் சட்டம், பிரிவு 17–ன்கீழ் பி.சா.ஆ.6 ஆவணம் கட்டாயமாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பி.சா.ஆ.6 ஆவணத்திற்கு உரிய முத்திரை தீர்வை செலுத்தப்படவில்லை. பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரத்தில்

குடியிருக்கும் நிலத்தில் 7 மகன்களுக்கும் சம பங்கு உள்ளது என்றும், தகப்பனார் பெயரில் உள்ள குப்பன் காடு மகள்களுக்கு சீதனமாக வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு பார்க்கும்பொழுது 17.05.1995 தேதியில் சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது என்பதால் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்திய முத்திரைச் சட்டம், பிரிவு 35–ன்படி பி.சா.ஆ.6 ஆன ஒப்பந்த பத்திரம் உரிய முறையில் முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை என்பதால் சாட்சியத்தில் ஏற்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே பி.சா.ஆ.6 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

13. பி.சா.1 லட்சுமி தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் 20.08.2019 தேதியிட்ட பி.சா.ஆ.2 ஆவணத்தின்படி தான் சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதற்கு எழுத்து மூலமான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றும், பி.சா.ஆ.6 ஆவணம் பற்றி பி.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். பி.சா.2 கண்ணன் தன் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் பி.சா.ஆ.2 ஆவணத்தின்படி 20.08.2019 ம் தேதி சீரங்கன் என்பவரின் மகள்கள் மட்டும் ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளனர் என்றும், பி.சா.ஆ.2 ஆவணத்தில் தன் தாயார் மல்லம்மாளை முதல் மனைவி என குறிப்பிடப்பட்டுள்ளது தவறானது என்றும், தன் சகோதரிகள் சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். வாதிகள் மற்றும் 1 முதல் 10, 15 முதல் 21 பிரதிவாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களுக்கு உண்டான வில்லங்க சான்றை பெற்று

பார்த்தபோதுதான் ஆவண எண்.7096/2019 பற்றி தெரிய வந்தது என கூறப்பட்டது ஏற்கும்படியாக உள்ளது. பி.சா.ஆ.2 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை. மேலும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட முன்தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டது.

**2013 (2) CTC 160 (Mad)**

**Pugazhenthi and Another -Vs- Sundari Ammal and Others**

**Para. 22 –** That apart, after death of Govindasamy Kounder in the year 1975, the Second Plaintiff was entitled to 1/4th undivided share in the suit properties. Therefore, she is also a necessary party for the partition. But, the Second Plaintiff was not included in Ex.A1-Partition Deed. Therefore, from looking at Ex.A1 from any angle, the document cannot stand and is liable to be set aside. Therefore, I am of the considered view that Ex.A1-Partition Deed dated 24.07.2006 is liable to be set aside. Accordingly, the same is set aside and the Plaintiffs are entitled for a declaratory decree in respect of Ex.A1- Partition Deed dated 24.07.2006 as an invalid, null and void document.

**2018(2) MWN (Civil) 421**

**R.Vatsala -Vs- R.Krishna Kumar**

**V. <u>Conclusions</u>: .....**

(i) The appellants became aware of the fabricated documents that is the deed of family arrangement dated 18.08.1995 and the partition deed dated 27.11.2000 only on 05.04.2010 being the date of the reply sent by the first respondent to the notice sent by the appellants seeking partition of the suit schedule property. The suit C.S.No.730 of 2010, for partition and declaration to declare the partition deed dated 27.11.2000 and the settlement deed dated 10.02.2010 in favour of the second respondent as null and void was filed by the appellants on 19.08.2010 that is within three years from 05.04.2010 being the date of reply sent by the first respondent. Hence, we conclude that the suit filed by the appellants is well within the period of limitation.

**2010 (1) MWN (Civil) 750**

**Marie Louise -Vs- Marie Bernadette**

**Para. 42** - …… Further, even if the property is taken care of and maintained by the defendant, such an act done by the defendant would only enure to the benefit of the plaintiff as a co-sharer. Such a possession by the defendant would not be construed as an adverse possession or it is detrimental to the interest of the plaintiff or it would not in any way take away the right of the plaintiff to seek Partition. Therefore, the question of limitation or adverse possession, as claimed by the

defendant, does not arise for consideration in this Appeal. Hence, the point for consideration are answered accordingly.

மேற்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. பி.சா.ஆ.2 ஆன 20.08.2019 தேதியிட்ட ஆவண எண்.7096/2019 ஆன பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றும், விழலானது மற்றும் இல்லாநிலையது என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

14. பி.சா.ஆ.6 ஆன ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் உரிமை இல்லை என கூறப்பட்டது ஏற்கும் படியாக இல்லை. வா.சா.ஆ.1 ஆன கிரையப்பத்திரத்தின்படி தாவா சொத்துக்கள் சீரங்கன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் சீரங்கன் என்பவரின் மகன்கள், மகள்கள் மற்றும் சீரங்கனின் மனைவிகள் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 5/13 பங்குகள் கூட்டாக பாத்தியப்பட்டது ஆகும். பிரதிவாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்ததாக கூறப்பட்டது ஏற்கும்படியாக உள்ளது. வாதிகள் தரப்பில் 1 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக கூறப்பட்டது ஏற்கும்படியாக உள்ளது. வாதிகள் வழக்கை தக்க சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வாதிகளுக்கு வழக்குரையில் கோரியபடி பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது ஆகும். பிரதிவாதிகள் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட 2019 (6) SCC 409, 2003 (4) SCC 161, 2022 (15) SCC 475, 2010 (5) SCC 401, 2025 SCC Online SC 762 மற்றும் 2025 INSC 434 – ஆகிய முன் தீர்ப்புரைகள் இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும்

சூழ்நிலைகளுக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை ஏற்கும்படியாக உள்ளது. கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை ஏற்கும்படியாக இல்லை. மேற்கண்ட பரிசீலனைகளின்படி 1 முதல் 6 எழுவினாக்கள் வாதிகளுக்கு ஆதரவாகவும், பிரதிவாதிகளுக்கு எதிராகவும் தீர்மானிக்கப்படுகின்றது.

15. <u>எழுவினா 7</u>:–

ஏற்கனவே எழுவினாக்கள் 1 முதல் 6–ல் கண்ட தீர்வுகளின் படி வாதிகளுக்கு வழக்குரையில் கோரியபடி பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்பதால் வாதிகளுக்கு வேறு பரிகாரம் அளிக்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்படுகின்றது.

16. முடிவில், வாதிகளுக்கு வழக்குரையில் கோரியபடி பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 7096/2019 – ஆக 16.09.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட 20.08.2019 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இல்லா நிலையது, விழலானது மற்றும் செல்லத்தக்கது அல்ல என விளம்புகை செய்தும், தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 13 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் வாதிகளுக்கு 5 பாகங்களை கூட்டாக ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், 2 முதல் 6, 9–வது மற்றும் 10–வது பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படும் வரை வாதிகளின் பங்கை பொறுத்து மட்டும் மூன்றாம் நபர்களுக்கு பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் விற்க கூடாது என்றும், வில்லங்கம் செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், காடையாம்பட்டி வட்டம், தீவட்டிபட்டி கிராமம், பட்டா எண்கள் 108 மற்றும் 164 –யை பொறுத்து 2 முதல் 6, 9–வது மற்றும் 10– வது

பிரதிவாதிகளின் பெயர்களிலோ அல்லது வேறு நபர்களின் பெயர்களிலோ தாவா சொத்துக்களைப் பொறுத்து இறுதியாக பாகப்பிரிவினை ஏற்படும் வரை பொய்யான மற்றும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களிலும், பட்டாவிலும் எந்தவிதமான மாற்றமும் 11 முதல் 14 பிரதிவாதிகள் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் :–

வாதிகள் தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.தங்கராஜ் (5 ம் வாதி) |

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.05.1957 | கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 21.08.2019 | பட்டா எண்.108–ன் பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.3 | 21.08.2019 | பட்டா எண்.164–ன் பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4 | 11.10.1999 | பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 07.05.2008 | சீரங்கன் என்பவரின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | 20.08.2019 | ஓமலூர் சார்பதிவாளர் அவர்களின் நடவடிக்கை |
| வா.சா.ஆ.7 | 24.10.2019 | சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.8 | – | அஞ்சல் ஒப்புகை அட்டைகள் |
| வா.சா.ஆ.9 | 20.08.2019 | பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:

| | |
|---|---|
| பி.சா.1 | திருமதி. லட்சுமி (2–ம் பிரதிவாதி) |

| | |
|---|---|
| பி.சா.2 | திரு.கண்ணன் (7-ம் பிரதிவாதி) |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 10.06.2022 | மனு இரசீது |
| பி.சா.ஆ.2 | 20.08.2019 | பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் |
| பி.சா.ஆ.3 | 12.09.2019 | சட்ட கருத்துரை |
| பி.சா.ஆ.4 | 22.07.2021 | சேலம் (மேற்கு) மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை |
| பி.சா.ஆ.5 | 22.04.2019 | சீரங்கன் என்பவரின் இறப்பு சான்றிதழ் |
| பி.சா.ஆ.6 | 17.05.1995 | ஒப்பந்த பத்திரம் |

(ஒம்/-என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.